Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.



Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 34 இதழ் - 9 செப்டம்பர் - 2021

தனிப்பிரதி ரூ.10/-



**கடந்த 10.9.2021 அன்று நடந்த காங்கேயம் சபை சகோ. பென்னி – லாவின் குடும்ப கூடுகையின் போது...**



### ஆசானின் அறிவுரையிலே ...

| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| வேதாகமம் ஓர் அறிமுகம் | 11 |
| பெண்கள் பகுதி | 13 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 22 |
| உருமாறிய உலகத்தின்... | 24 |
| பரிசுத்த ஆவியை... | 28 |
| மகிழ்ச்சிக்குறிய குடும்பம் | 31 |

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.




## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 34 September- 2021 Issue - 9**


ஆசிரியர் உரை

## நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?

கேள்வியும், பதிலும் நாம் வாழும் உலகத்திற்குப் புதிதான ஒன்றல்ல. உலகம் உண்டானது முதல் கேட்கப்பட்டும், பதிலளிக்கப்பட்டும் வருகிறது. கேள்வி கேட்பதை இப்பூமியில் தொடங்கி வைத்தவன் சர்ப்பமாகிய சாத்தான். ஆம், சர்வவல்ல தேவனால் படைக்கப்பட்ட ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் செழிப்புமிக்க ஏதேன் தோட்டத்தில் களிப்புமிக்கவர்களாக வாழ்ந்து வந்த நிலையில், தந்திரமுள்ள சர்ப்பம் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாளைப் பார்த்து. **நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ?** என்றது. இக்கேள்வி தான் உலக வரலாற்றில் கேட்கப்பட்ட முதல் கேள்வி. முதல் என்பது எப்பொழுதும் சிறப்புக்குரியது, நினைவில் நிற்கத்தக்கது. ஆயினும், இந்த முதல் கேள்வி ஒரு நல்லவரால், நற்தன்மை கொண்டவரால், நல்ல நோக்கத்தோடு கேட்கப் பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். என்ன செய்வது? சில நேரங்களில் நாம் விரும்பாதது நடந்து விடுகிறது. வஞ்சிக்கும் நோக்கத்தோடு கேட்கப்பட் இக்கேள்வியின் தீய நோக்கை அறிந்துணராத எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட ஏவாள் சர்ப்பத்திற்கு பதிலாக, **தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்** (ஆதி.3:13). ஆக, முதல் கேள்வி வஞ்சிக்கும் தன்மை கொண்ட சாத்தானிடமிருந்தும், முதல் பதில் எலும்பு அக்கா ஏவாளிடம் இருந்தும் வந்துள்ளது! என்ன ஓர் அருமையான கூட்டணி?

பொதுவாக, கேட்கப்படும் கேள்விகளை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, பதிலை எதிர்பார்த்துக் கேட்கப்படும் கேள்வி. மற்றொன்று, பதில் தேவைப்படாத அளவில் கேட்கப்படும் கேள்வி. இவ்வகைக் கேள்விக்குள்ளாக பதில் பதுங்கியிருக்கும். நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? என்ற கேள்வி இவ்வகையைச் சார்ந்த ஒன்று தான். இக்கேள்வியைப் பரலோக தேவன், இப்பாழுலகில் முதன் முதலாகப் பிறந்த மனிதனாகிய காயீனிடத்தில் கேட்டுள்ளார். இக்கேள்விக்கான பதில் தெரியாதவராகவோ அல்லது காயீனிடமிருந்து பதிலை எதிர்பார்த்தோ தேவன் கேட்கவில்லை. ஏனெனில், நன்மை செய்தால் மேன்மை உண்டு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று வெளிப்படையானது.

சரி, தேவன் கேட்ட இக்கேளிவியை அடிப்படையாக வைத்து, நமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முன், இக்கேள்வியின் பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

தேவனால் அவரது சாயலில் உருவாக்கப்பட்ட முதல் மனிதனுக்கும், முதல் மனுஷிக்கும் பிறந்த முதல் இரண்டு பிள்ளைகள் **காயீன்** மற்றும் **ஆபேல்**. இவ்விரண்டு பேரும் இரண்டு தொழிலைத் தெரிந்து கொண்டபடியால் காயீன் நிலத்தைப் பயிடும் வேலை செய்ததால் முதல் விவசாயி ஆனான். ஆபேல், ஆடுகளை மேய்க்கும் தொழிலைத் செய்த படியால் முதல் மேய்ப்பன் ஆனான். இப்படியாகத் தங்கள் தொழிலைச் செய்து வந்த நிலையில் ஏதோ ஒரு கால கட்டத்தில், தேவன் இவர்களிருவரிடமும் காணிக்கை கொண்டு வரும்படியாகக் கேட்டுள்ளார். எப்பொழுது கேட்டார். என்ன கேட்டார், எப்படிக் கேட்டார் எவ்வளவு கோட்டார் போன்ற விவரங்கள் நமக்கு வெளிப்படுத்தப் படவில்லை. ஆனால், கேட்டார் என்பது மாத்திரம் நிச்சயமான ஒன்றாக உள்ளது.

காணிக்கை செலுத்தின காரியத்தில் காயீன் , ஆபேல் ஆகிய இருவரும் தேவச் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்துள்ளார்கள், சந்தேகமில்லை. ஆனால், நீதியும், பட்சபாதமுமில்லாத தேவன் ( அப் .10:34,35) ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்து, காயீனையும் அவன் காணிக்கையையும் நிராகரித்துள்ளார் ( ஆதி 4:4,5). இங்கே தேவ அங்கீகாரத்துக்கும், தேவ நிராகரித்தலுக்குமான காரணம் என்னவென்று நமக்குக் கொடுக்கப் படாவிட்டாலும், சில ஆயிரம் ஆண்டுகள் கழித்து எபிரெயர் ஆசிரியரால் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் **விசுவாசம்** என்று (எபி.11:4). தேவச் செயலுக்கு எப்போதும் ஒரு வலுவான காரணம் இருக்கும். ஆகவே, எச்சூழலிலும் நாம் தேவனுக்கு விரோதமாக நம் விரலை நீட்டத் துணிந்து விடக் கூடாது!

இப்படித் தன் இளவலின் காணிக்கை அங்கீகரிக்கப்பட்டு, தன்னுடையது அங்கீகரிக்கப்படாததைக் காயீனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மிகவும் எரிச்சலடைந்ததோடு, அவன் முகநாடியும் வேறுபட்டது (4:5). எல்லாவற்றையும் கவனித்துக் காணும் தேவனுடைய **உலாவும் கண்கள்** (II நாளா. 16:9) காயீனையும் இங்கே கண்டது. தான் எந்த இடத்தில் தவறு செய்தேன் என்பதைக் கண்டுபிடித்து, அதைச்சீர் செய்யும் வழியைத் காயீன் தேடாமல் அடுத்தவனைக் காய்மாகார உணர்வோடு பார்க்கிறான். ஆனால் தேவன், **நீ அங்கீகரிக்கப் படாமல் போனதற்குக் காரணம் நீதான், அதிலே உன் சிந்தையைச் செலுத்து, அடுத்தவர் மீது சினங்கொள்வதை நிறுத்து** என்கிறார். முதல் பிறந்த மனிதனாகிய காயீனுக்கு கர்த்தர் கொடுக்கும் இப்பாடம் எல்லாக் காலத்திலும் வாழும் மனுக்குலம் அனைத்துக்கும் ஏற்றதாகவே உள்ளது.

கர்த்தர் காயீன் நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டா யிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? என்று பதில் தேவைப்படாத கேள்விகளை எழுப்பிய கையோடு, **நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யா திருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும்; நீ அவனை ஆண்டு கொள்ளுவாய்** என்றார் (அதி:4:7) கவனியுங்கள். காயீன் எரிச்சல டைந்து, முகநாடியை வேறுபடுத்தியதோடு நிற்காமல், தன் சகோதரனாகிய ஆபேலோடு வஞ்சகமாய்ப் பேசி, அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதர னாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான். தேவனுக்கு விரோதமான அவன் செயல் அத்தோடும் அடங்காமல், கர்த்தர் உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கேட்ட போது, அதற்கு அவன் : **நான் அறியேன் ; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ** என்றான் (ஆதி. 4:8,9). காயீனின் தேவ விரோதக் காரியங்கள் இப்படிக் கட்டுக் கடங்காமல் போனபடியால், அவன் நிமித்தம் கர்த்தர் பூமியைச் சபித்து, அது தன் முழு பலனைக் கொடாதபடி செய்ததோடு சபிக்கப்பட்ட பூமியில் அவனை நிலையற்று அலையச் செய்தார். (4:11,12) அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: **எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது** என்றான் (4:13). அந்த இடத்தில் கூட **அவன் தன் செயலுக்காக வருந்தினபாடில்லை.** தண்டனைக்காகத்தான் புலம்புகிறான். மனமாற்றம் மருந்துக்கும் இல்லை. எப்படிப்பட்ட பிறவி பாருங்கள். அதுவும் முதல் பிறவி! இவன் வழியாகவா நாம் வந்திருக்கிறோம்?!

சரி, நாம் கவனித்த இவ்வசனப் பகுதியிலிருந்தும், கர்த்தர் காயீனோடு பேசியவைகளிலிருந்தும்  இம்மாதம் நம் பக்தி வாழ்வுக்கும், பரலோக பயணத்துக்கும் என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று இப்பொழுது பார்ப்போம்.

### I **நன்மை செய்தால் மேன்மை உண்டு**

கர்த்தர் காயீனோடு பேசியவைகளிலிலருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நாம் நன்மை செய்தால் மேன்மை உண்டு என்பது.

நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? என்பதற்கு மூல மொழியிலும், ஆங்கில மொழியாக்கத்திலும் இவ்விதம் உள்ளது. **நீ சரியாகச் செய்தால், உன்னுடையது அங்கீகரிக்கப்பட்டிருக்காதோ? என்று. நீ சரியாகச் செய்தால் என்பதன் பொருள், நீ கர்த்தர் கட்டளையிட்டபடி செய்திருந்தால்** என்பது. ஆக, கர்த்தர் கேட்ட காணிக்கை எப்படியிருக்க வேண்டும் என்று அவர் உனக்குச் சொல்லியிருந்தாரோ அதன்படி அப்படியே நீ செய்திருந்தால் உன்னுடையதும் அங்கீகரிக்கப்பட்டிருக்குமே. முழுக்க முழுக்கத் தவறு உன்னுடையதுதானே. உண்மை இப்படியிருக்க அதற்கு ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் என்றே காயீனிடம் வினவியுள்ளார்

அங்கே காயீன் காணிக்கை கொடுக்கையில் தேவன் சொன்னதை அப்படியே விசுவாசித்துச் செய்யவில்லை. **எப்படியெனில், விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று நற்சாட்சி** பெற்றான்...... என்று எபிரெய ஆசிரியர் கூறுகிறார் (எபி.11:4). பவுலடியார் ரோமருக்கு எழுதும்போது, ஆதலால், **விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத் தினாலே வரும்** (ரோமர் 10:17). என்று கூறியுள்ளார். ஆக, **விசுவாசத்திற்கு** அடிப்படை **தேவனுடைய வார்த்தையாய்** இருக்கிறது. அப்படிப்பட்ட தேவ வார்த்தையை **போதுமான** அளவு நம்பாமல், தேவன் சொன்னதையும் செய்து, **தன் விருப்பத்தையும்** அத்தோடு சேர்த்து காணிக்கை செலுத்தி நிராகரிக்கப்பட்டவனாக மாறினான். காயீன் காணிக்கையை இப்படி நிராகரித்ததன் மூலம் **நான் என்ன சொல்கிறேனோ அதை அப்படியே செய்ய வேண்டும்** என்பதைக் கர்த்தர் ஆணித்தரமாக வெளிப்படுத்திவிட்டார். இந்த உண்மை அநேக ராகிய நமக்கு இன்னும் புரிந்தபாடில்லை!

இங்கு மாத்திரமல்ல, வேதாகமத்தின் வேறு இடங்களிலும் தேவன் இக்கருத்தை வெளிப்படுத்தாமலில்லை. மோசேயின்

நாட்களில் நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி **நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்** என்று (உபா.4:2) கூறியுள்ளார். மேலும், ஞானி சாலமோனைக் கொண்டு தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; **அதினோடே ஒன்றுங் கூட்டவுங்கூடாது அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது;** மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்து வருகிறார் என்று சொல்லியுள்ளார். (பிர.3:14) முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த காயீனோடு ஒரு முறையும், மோசேயின் காலத்தில் இரு முறையும் சொன்னதோடு நிற்காமல், புதிய பிரமாணத்தின் இறுதியில் இக்கருத்துக்கு மேலும் வலு சேர்க்கும்படியாய், இந்த புத்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: **ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்த தீர்க்க தரிசனப் புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்ட வைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்** (வெளி :22:18,19) என்று கடுமை காட்டியுள்ளார்.

அப்படியானால் அருமையானவர்களே! தேவன் நமக்குத் தந்துள்ள வேத வார்த்தைகள் சம்பந்தமாக நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? காயீனின் ஆவியால் மேற்கொள்ளப்பட்டு தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறோம் என்று சொல்லிக் கொண்டு, தேவன் சொல்லாதவைகளையும் நம் விருப்பத்திற்கிணங்க செய்து நிராகரிக்கப்பட்டுக் கொண்டுள்ளோமா? தேவன் சொல்லுகிறபடி செய்தால் தான் மேன்மையும், அங்கீகாரமும், அதைத் தொட்டு ஆசீர்வாதங்களும் உண்டு என்பது நமக்குப் புரிகிறதா? இனிமேலாகிலும், வேத வசனங்களுக்கு உரிய மரியாதை கொடுப்போம்.

### II பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்

கர்த்தர் காயீனோடு பேசியவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் என்பது.

நம் தேவனை நினைத்து நாம் புளகாங்கிதம் அடைவதற்கு எண்ணிலடங்கா காரணங்கள் உண்டு. அவைகளில் ஒன்று,

தெரிந்தெடுக்கும் வாய்ப்பை நமக்கு முன்பாக வைத்து, தெரிந் தெடுக்கும் உரிமையையும் நமக்குக் கொடுக்கிறார். நன்மை செய்தால் **மேன்மை,** நன்மை செய்யவிட்டால் **பாவம் படுத்திருக்கும்.** கொடுக்கப்பட்ட உரிமையை தவறாகப் பயன்படுத்தி, தேவ கட்டளை நீ விசுவாசியாதபடியால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் என்கிறார். ஏனெனில், **விசுவாசத்தினாலே வாத யாவும் பாவம்** [ரோமர் 14:23] என்று வாசிக்கிறோம். தேவன் சொன்னதை ஆபேல் விசுவாசித்துக் காரியமாற்றிய போது, காயீன் விசுவாசித்து நடவாமல், தன் அவி சுவாசத்தினிமித்தம் பாவத்திற்குக் கதவை திறந்து கொடுத்தான். உள்ளே வந்த பாவம் வாசற்படியில் அப்படியே படுத்துக் கொண்டது. ஒரு விஷ ஜந்து போலவும், ஒரு கொடிய விலங்கினம் போலவும், படுத்திருக்கும் பாவம் அவனை சதா தீண்டுகிறது, கடிக்கிறது. அதாவது, பாவம் மேலும், மேலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

காயீன் வாழ்க்கையில் கர்த்தர் இங்கே சொல்கிறபடி தானே நடந்தது. அவன் செய்த முதல் பாவம், தேவன் சொன்னதை அப்படியே விசுவாசியாமற் போனது. அதைத் தொடர்ந்து எரிச்சல் அடைந்து, முக நாடியை வேறுபடுத்தியது. அடுத்து, தேவன் தவறை உணர்த்திய நிலையில் உணர மறுத்தது; சகோதரனோடு வஞ்சனையாய் பேசியது, வயல்வெளியில் சகோதரனோடு நல்லவனைப் போல் நடித்து வாய்ப்புக்காகக் காத்திருந்தது. பிறகு கொலை செய்தது. மேலும், கர்த்தர் உன் சகோதரன் எங்கே என்ற போது பொய் சொன்னது. இன்னும் என் சகோரனுக்கு நான் காவலாளியோ என்று எக்குத்தப்பாக கர்த்தரிடம் பேசியது என்று அவன் வாசற்படியில் படுத்திருந்த பாவம் அவனை மேலும், மேலும் மோசப் போக்கியதே. இதைத்தான் கர்த்தர் அங்கே பாவம் வாசற் படியில் படுத்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். கர்த்தர் அத்தோடு நிறுத்தாமல், பாவத்தின் ஆசை உன்னைப் பற்றி யிருக்கும் என்றும் கூறியுள்ளார். அதாவது, தேவச் சொல்லுக்குக் கீழ்ப்படிய மறுத்தால் அடுத்தடுத்து பாவம் உன்னைத் துரத்திக் கொண்டே இருக்கும் என்பதே அதன் பொருள்.

தாவீதின் வாழ்விலும் இது உண்மையாயிருந்தது! II சாமு வேல் பதினோராம் அதிகாரத்தில், உப்பரிகையின் மேல் நின்றவன் கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்தான், அது அவனை விபச் சாரத்திற்கு இழுத்துச் சென்றது. அதை மறைக்க ஒரு நாடகம், அது எடுபடாததால் சதித்திட்டம், பிறகு கொலை. அப்பப்பா, பாவம் தாவீது போன்றவர்களையே எப்படிப் பாடாய்ப் படுத்தியது பாருங்கள்! இங்கே காயீனுக்கும், தாவீதுக்கும் **ஒரே வேறுபாடு.** கர்த்தர் காயீனுக்கு உணர்த்திய போது அவன் உணரவில்லை.

ஆனால், தாவீதுக்கு கர்த்தருடைய தாசன் நாத்தான் எடுத்துச் சொன்ன போது, **நான் பாவம் செய்தேன்** என்று ஒத்துக் கொண்டு [II சாமு 12:13] மனம் மாறினான் [சங்கீதம் 51].

ஆக அன்பானவர்களே! தேவ வார்த்தைக்கு கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிய மறுப்போமானால் அடுத்தடுத்து பாவத்தால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்படுவோம். எச்சரிக்கை தேவை. நான் காயீன் போல, தாவீது போல பாவம் செய்வதில்லை என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண் டாம். சிலுவைக்குப் பின்னால் வாழக்கூடிய நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களை மீறி நடந்தால் அவையனைத்தும் பாவமே! [II யோவான் 9] இரட்சிப்பு, சபை, ஆராதனை, பக்தி வாழ்வு என்று எதுவாக இருந்தாலும், தேவ வார்த்தை தான் முக்கியம். மீறி நடக்கத் துணிகரம் கொள்வோமானால், அடுத் தடுத்து பாவத்தால் தீண்டப்பட்டு படுகுழியில் தள்ளப்படுவோம்.

## III **பாவத்தை மேற்கொள்ள முடியும்**

கர்த்தர் காயீனோடு பேசியவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், நாம் பாவத்தை மேற்கொள்ள முடியும் என்பது.

நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும் என்பதோடு நிற்காமல், **நீ அவனை ஆண்டு கொள்ளுவாய்** என்றார். அதாவது, உன்னால் உள்ளே அனுமதிக்கப்பட்ட பாவம், வாசற்படியில் படுத்திருந்து மேலும், மேலும் உன்னைப் பாவத்திற் குள்ளாக்கினாலும், உன்னால் பாவத்தின் போக்கிரித்தனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, பாவத்தை உன்னால் அடக்கி ஆளுகை செய்யமுடியும் என்று கூறுகிறார்

இப்பஜப் பாவத்தை வீழ்த்த வேண்டுமென்றால் செய்த பாவத்திற்காக, பாவங்களுக்காக அதாவது, எந்தெந்த இனங்களில் தேவனுடைய வார்த்தைகள் மீறப்பட்டதோ அவைகளைக் கண்டறிந்து மெய் மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்ப வேண்டும். இப்படிச் செய்வோமானால், நம்மால் பாவத்தை மேற்கொண்டு ஆளுகை செய்ய முடியும். காயீன் பாவம் செய்த அந்தக் கட்டத் திலேயே தேவன் மனுக்குலத்துக்கு இந்நம்பிக்கையைத் தந்துள்ளார். காயீனே, நீ என் வார்த்தைகளை மீறி விட்டாய். இப்பொழுதும், ஒன்றும் கைமீறிப் போய் விட வில்லை. நன்மை செய்தால் உனக்கு மேன்மை உண்டு. நீ மனந்திரும்பு என்று வாய்ப்புக் கொடுக்கிறார்.

ஆனால், காயீன் உணர்வடையவோ, புரிந்து தேவச் சித்தத் திற்கு ஒப்புகொடுக்கவோ இல்லை. அடுத்தடுத்து

பாவத்திற் குள்ளாகி சாபத்தைப் பெற்றபோது கூட கெட்ட குமாரன் போல் புத்தி தெளிந்து அவன் அவனுக்குள் வரவில்லை. எனக்கு இட்ட தண்ட னையை என்னால் சகிக்க முயவில்லை என்று சொன்னானே தவிர, மற்றபடி தண்டனை எதினால் வந்தது என்ற சிந்தனைக்கு இடம் கொடுக்கவேயில்லை. முதல் பிறந்த மனிதன் நமக் கெல்லாம் நல்ல முன்மாதிரியைத் தராதது வேதனையாக உள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கு யாக்கோபு ஆசிரியர் கொடுக்கும் அறிவுரையைப் பாருங்கள். **ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்** (யாக்.4:7) ஆம், தேவனுக்கும், தேவனுடைய வார்த்தைகளுக்கும் நாம் அப்படியே கீழ்ப்படியும் போது, பாவத்துக்கும், பிசாசுக்கும் நாம் இடங் கொடுக்காதவர்களாக மாறுகிறோம். அந்த இடத்தில் பாவம் நம்மை ஆளாமல், கர்த்தர் காயீக்குச் சொன்னதுபோல் நாம் பாவத்தை ஆளுகிறவர்களாகிறோம். ஆக, பாவத்தால் வீழ்வதும், பாவத்தை ஆள்வதும் நம் கையில்தான் உள்ளது.

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? காயீன் போல தேவ வார்த்தைகளை மீறிப் பாவஞ்செய்து, தேவ மகிமையை நாமெல்லாரும் இழந்து நிற்பது மெய்தான். ஆயினும், தேவ கிருபையால் இயேசுவின் மூலமான மீட்பைப் பெற்று நீதிமான்களாக வாழும் வழி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே (ரோமர் 3:23,24). நாம் என்ன செய்யப் போகிறோம்? வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் (மத்.11:28) என்னும் இயேசுவின் மகா அழைப்பை ஏற்று, அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின்படியான இரட்சிப்பை, விசுவாசித்து (மாற்.16:16). மனந்திரும்பி (அப்.2:38). இயேசுவை தேவனுடைய குமரன் என்று அறிக்கையிட்டு, (அப்.8:37) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16), கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு ( அப். 2:37). கிறிஸ்துவின் சிந்தையை அணிந்தவர்களாய் (பிலி.2:5) பாவத்தை ஆண்டு கொள்ளும் பரிசுத்தமான பக்தி வாழ்வை நடத்தப் போகிறோமா அல்லது காயீன், பிலேயாம், கோரா போன்றவர்களின் வழியைப் பின்பற்றி பாவத்தில் வீழ்ந்து கிடந்து கெட்டுப்போகப் போகிறோமா? (யூதா.10) சொல்லுங்கள்.

காயீன்களின் வழி வேண்டவே வேண்டாம். ஆபேல் போன்று கர்த்தர் சொல்லுபவைகளைச் செய்து இம்மையிலும், மறுமையிலும் மேன்மையுள்ள வாழ்வு வாழ்வோம்! ஆமென்!! ✝

# வேதாகமம் ஓர் அறிமுகம்

Bro. J.C. **சோட்**

**வே**தாகமம் இவ்வுலகமும் அதிலுள்ளவைகளும் எவ்விதம் உண்டாயின வென்று விவரமாகச் சொல்லுகிறது (ஆதி.1,2 அதிகாரங்கள்) இது, மனிதனைப் பற்றிய ஒட்டுமொத்தத் தகவல்களையும் தயக்கமின்றித் தருகிறது. அதுமாத்திரமல்ல, அதற்கு ஆதாரமாக வரலாற்றுத் தகவல்களையும், அறிவியல் பூர்வமான தகவல்களையும் வேதாகமம் தன்னகத்தே கொண்டுள்ளது.

- வேதாகமம் ஆணும், பெண்ணும் தேவசாயலில், அதாவது என்றென்றும் அழியாத ஆத்துமாவுடன் உண்டாக்கப்பட்டதைச் சொல்லுகிறது (ஆதி.1:26,27).
- வேதாகமம் மனிதனுடைய வீழ்ச்சியைப் பற்றியும், மரணம் எப்படி இவ்வுலகத்திற்குள் பிரவேசித்தது என்பது பற்றியும் சொல்லுகிறது (ஆதி3).
- வேதாகமம் மோசேயின் சம்பவங்களைக் காலகிரமத்துடன் வெளிப் படுத்துகிறது. அவர் எப்படி இஸ்ரவேல் ஜனங்களை எகிப்த்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கினார் என்பதையும் விவரமாக வெளிப்படுத்துகிறது (யாத்.20).
- வேதாகமம் கிறிஸ்துவின் வருகை பற்றியும், கன்னி மரியினிடத்தில் அவருடைய பிறப்பு பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கிறது (மத்தேயு 1).
- வேதாகமம் கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றியும், அவருடைய சிலுவை மரணம் பற்றியும் சொல்லுகிறது (மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்).
- வேதாகமம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது (I கொரி.15;1-4). மேலும், அவர் பரமேறி பிதாவினிடத்திற்குச் சென்றதையும் விவரிக்கிறது (அப்போஸ்தலர்1).
- வேதாகமம், சபை ஆரம்பத்தைப் பற்றியும் ஒருவர் அதிலே எப்படி அங்கத்தினராவது என்பது பற்றியும் போதிக்கிறது (அப்.2).
- வேதாகமம் ஒருவர் தன் கடந்த காலப் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லுகிறது.

- சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும் [ரோமர் 10:17] அதை விசுவாசிக்க வேண்டும் [ ரோமர் 10:10]
- வேதாகமம் ஒருவர் தன் கடந்த காலப் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லுகிறது.
- சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும் [ரோமர் 10:17] அதை விசுவாசிக்க வேண்டும் [ ரோமர் 10:10]
- பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் [ அப்.17:30]
- கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் [மத்.10:3], பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் [மாற்கு 16:16; அப். 2:38; 22:16]

- வேதாகமம் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டுமென்பது பற்றியும் விரிவாக விளக்குகிறது.
- வேதாகமம் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டுமென்பது பற்றியும் விரிவாக விளக்குகிறது.
  - வாரத்தின் முதல் நாள் கூடுதல் [அப்.20:7],
  - ஜெபம் [அப்.2:42]
  - சத்திய வசனத்தைப் படித்தல் [ தீமோ.2:15]
  - பாடல் [எபே.5:19]
  - கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தல் [மத்.26:26-28]
  - காணிக்கை கொடுத்தல் [Iகொரி. 16:1,2].
- வேதாகமம், கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமென்று விவரிக்கிறது [II பேதுரு 1:5-11; வெளி. 22:14].
- வேதாகமம், நிறைவாக வருங்காலத்தில் மனிதனுக்கு என்ன நடக்கும் என்பதையும் எடுத்தியம்புகிறது.
- வேதாகமம், நிறைவாக வருங்காலத்தில் மனிதனுக்கு என்ன நடக்கும் என்பதையும் எடுத்தியம்புகிறது.
- மரணம் என்பது மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது [எபி.9:27]
- கிறிஸ்து மறுபடியும் வருவார் [ யோவான் 14:1-3]
- நியாயத்தீர்ப்பு நடக்கும் [IIகொரி.5:10]
- நீதிமான்கள் பரலோகத்திற்கும், துன்மார்க்கர் நித்திய நரகத்திற்கும் போவார்கள் [மத்.25:46].

**நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்களா? அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படிவீர்களா? இப்படிச் செய்பவர்கள் மட்டுமே என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். வெளி.14:13, பின்பு, பரலோகத்திலிந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.** ✝

பெண்கள் பகுதி

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்களுக்கு ஸ்தோத்திரங்களை கூறிக் கொள்கிறேன். சுகமாயிருப்பீர்களென்று நம்புகிறேன். வேத வசனங்களைக் கற்றுக் கொள்ளவும், ஆராயவும் தேவன் செய்த கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

நாம் நம்பியிருக்கிற நம்பிக்கையில் ஒன்றானதாயிருக்கிற ஒன்று புதிய ஏற்பாடு மட்டும் தான். [அப்போஸ்தலர் 2 ம் அதிகாரம்] நமக்கும் தேவனுக்குமிடையே உள்ள ஒரே பிரமாணம் அல்லது உடன்படிக்காக புதிய ஏற்பாடு அதுதான் உண்மை மறுக்கமுடியாத மாற்ற முடியாத ஒரே உண்மை. இது தான். இதில் எந்த சந்தேகமுமில்லை. பெந்தேகோஸ்தே நாள் தொடங்கி, முடிவு பரியந்தம் நம்மைக் கட்டுப்படுத்துவதும் அதுதான். ஏனென்றால், கொலோ 2:14 ன் படி பழைய பிரமாணத்தை சிலுவையில் ஆணியடித்ததினால் புதிய பிரமாணம் மதிப்பு மிக்கதும், உண்மையானதென்றும் நாம் மறுக்காமல் உறுதியாய்ச் சொல்ல முடியும்.

அப்படியானால் நாம் பழைய பிரமாணத்தை என்ன செய்ய போகிறோம்? மிகச் சிறந்த பதிலைப் பெற்றுக்கொள்ள வேதாகமம் என்ன பதில் கொடுக்கிறதென்று பார்ப்போம். இன்றைக்கு பழைய ஏற்பாடு எந்த இடத்தைப் பிடித்துள்ளது? வேதாகமம் ஏதாவது தகவலை கொடுக்கிறதா?

புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 6 இடங்களில் பழைய ஏற்பாட்டை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் மிக, மிகச் சிறப்பான பிரமாணம் பழைய ஏற்பாடு என்று காண்பிக்க இந்த 6 கருத்துக்கள் போதுமானது. எல்லோரும் ஒவ்வோரு நாளும் இதற்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுத்து சரியான முறையிலே பயன்படுத்த வேண்டும்.

**I தேவ ஆவியினால் அருளப்பட்டது**

வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியலேண்டியது.

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடை சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள். பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். [I பேதுரு. 1:20, 21]. ரோமர் 15:4:ல் முந்தி எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது என்று வாசிக்கும் பொழுது தேவனுடைய ஆவியானவரைக் கொண்டு இவைகள் எழுதப்பட்டவைகள் என்று விசுவாசிக்காவிட்டால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பழைய ஏற்பாடு விசேஷமானது. ஏனென்றால், தேவன் தானாகவே தன் அநந்த ஞானத்தால் வெளிப்படுத்திய ஒன்று. II தீமோ: 3:16,17 – ல் வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டதென்று பார்க்கிறோம். இரண்டு ஏற்பாடுகளுமே தேவனுடைய சொந்த வார்த்தைகளாகும்.

மேலும், தேவன் என்ன நினைக்கிறார் என்பதை காட்டுகிறது. I கொரி 2:11–ல் தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். மேலும் [9–16] வசனங்களில் பார்த்தால் தேவன் தன்னை யார் என்று வெளிப்படுத்தியிராவிட்டால், நமக்கான அவருடைய சித்தத்தை தெரிந்திருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருந்திருக்கும். நம்மை சிருஷ்டித்தவர் ஒருவர் இருக்கிறார். ஆனால், அவர் எப்படியிருப்பார்? அவருடைய தன்மை என்ன? நம்மைப்பற்றி அவருடைய சித்தம் என்ன? இந்தப் பூமியிலே இந்த பரிசுத்த வேதாகமம் மட்டும் நம் கையில் இல்லாதிருந்தால் இவைகள் எதுவுமே நமக்குத் தெரியாமல்தான் இருந்திருக்கும். பழைய ஏற்பாடு மட்டுமே நிறைய தகவல்களை நமக்கு கொடுக்கிறது. தேவ ஆவியினால் அருளப்பட்ட பழைய ஏற்பாடு ஒரு பெரிய சொத்து. பொன்னைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றது தேவனுடைய வார்த்தை. I சாமு : 3:1–ல் பார்க்கும்போது கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது என்று வாசிக்கிறோம். இதற்குப் பிறகுதான் தேவன் பல காரியங்களை வெளிப்படுத்தினார்.

பழைய ஏற்பாட்டின் ஆசிரியர் தேவன். இன்றைக்கும் பலர் கடிதங்கள், குறிப்புகள் போன்றவற்றை சேமித்து வைக்கின்றனர். காரணம் அதிலுள்ள கருத்துக்களை சேகரிக்க அல்ல. மாறாக, அவைகளை எழுதியவர்கள் மேல் உள்ள அளவில்ல அன்பினால் அப்படிச் செய்கின்றனர். அப்படியானால், பழைய ஏற்பாட்டின் ஆசிரியர் நம் தேவனாக இருப்பதால் அதைப் போற்றி மதிப்பது எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டும்? பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடுகள் பெரும்பாலான இடத்தை வேதத்தில் பிடிக்கிறது.

இன்றைக்கும் அது விலை மதிக்கமுடியாத ஒன்றாக உள்ளது. தாவீத சொல்லும் போது , கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது[II சாமு: 23:2]. எனவே, தேவனுடைய ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டு பழைய ஏற்பாட்டை எல்லாப் புரிதலோடும் சரியாகப் படித்துக் கற்றுக் கொள்வது அவசியம். [ நெகேமியா: 9:20,30].

II **பழைய ஏற்பாடு உதாரணங்களால் நிறைந்தது.**

இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது[ I கொரி 10:11]. இன்றைக்கு வாழும் நமக்கும், உலகத்தின் முடிவும் மட்டும் வாழும் மக்களுக்கும் மிகவும் பிரயோஜனமாகவும், நன்மையான காரியங்களையும் பழைய ஏற்பாடு உள்ளடக்கியுள்ளது. அப்போஸ் தலனாகிய பவுல் கொரிந்து. பட்டணத்து சபைக்கு எழுதும் போது அவர் அறியாதவர் களாகவும் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பிள்ளைகள் செயல்பட்டது போல் செயல்பட வேண்டாம் என்றும் விரும்பி [I கொரி 10:11] நமக்கு எச்சரிப்பு உண்டாக என்று குறிப்பிடுகிறார்.

புதிய ஏற்பாடு, எல்லா மக்களும் தேவனுக்கு பிரியமுண்டாக நடந்து, கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறது. [ ரோமர் 1:16]. தேவன் கீழ்ப்படிதலையும் தம்முடைய வார்த்தைக்கு ஒப்புக் கொடுப்பதையும் எதிர்பார்க்கிறார். [ மத்தேயு 7:21;II தெச: 1:8]. பழைய ஏற்பாடு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மக்கள் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதை பல உதாரணங்களோடு நமக்கு விளக்குகிறது. தேவன் அதை உதாரணங்களாகக் காண்பித்து அதிலிருந்து நாம் கற்றக் கொண்டு நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் [ I கொரி 10:11] என்று எதிர்பார்க்கிறார். தேவ னுடைய நீதியுள்ள கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைமுறைக்கும் இது பிரயோஜ னமாகவே இருக்கிறது. தேவனால் தெரிந்த கொள்ளப்பட்ட மக்களை [இஸ்ரவேல்] எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கிபாலும், தேனும் ஓடுகிற தேசத்திற்கு [ யாத் 3:7 -10] அழைத்துச் செல்ல மோசே அழைக்கப்பட்டார். ஆனால், வெகு ஜனங்களுடைய செயல்களில் தேவன் பிரியப்படவில்லை. எனவே, அவர்களை வனாந்திரத்தில் அலையவிட்டார்[ I கொரி 10:5; எண்: 14:29-35;26:65;சங்: 106:26;எபி3:17].

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்த விக்கிரக ஆராதனை [I கொரி :10:7 ; யாத் : 32:6 ; 19 ; எண் 32:16–21] I தேவன் வெறுக்கிறார். புதிய ஏற்பாட்டில் அது பொருளாசை என்றும் [கொலோ : 3:5]. என்று பார்க்கிறோம். தேவன் இதை பொறுத்துக் கொள்வதேயில்லை, அது அவருடைய சித்தத்திற்கு எதிரானது. இன்னும் வேசித்தனம், முறு முறுப்பு இவைகள் பழைய ஏற்பாட்டில் எங்கும் பார்க்கலாம். தேவன் கண்டிக்கிறார். 23000 பேர் ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள் [I கொரி : 10:8 ; எண்; 25:1–9 ; சங் 106:29 ; வெளி: 2:14]. வேசிக் கள்ளரையும், விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் [ எபி: 13:14]. முறுமுறுத்தலும் தேவன் ஏற்றுக் கொள்ளாத ஒன்று. நம்முடைய சிருஷ்டிகறுக்கு அது பிடிக்காது. [I கொரி 10:10; யாத் 16:2,3; எண்.14:2,29–37; 16:41;17:5–10]. கோராகின் காரியத்தின் நிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதை யினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறு பேர் [14,700] [எண் 16:49].

பழைய ஏற்பாட்டில் உள்ள உதாரணங்களை நாம் படித்து தேவனுடைய கட்டளைகள் என்னவென்று பார்த்து, அதிலுள்ள பாடங்களை நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்துவோம். தேவனு டைய கட்டளைகள், நம்மேல் வைத்த அவருடைய மாபெரும் அன்பு இவைகளை வேதத்திலிருந்து கற்றுக் கொள்வோம்.

அருமையானவர்களே, இக்கட்டுரையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கலாம், 6 கருத்துக்களில் 2 மட்டும் தான் பார்த்திருக்கிறோம். அடுத்தமாதம் மீதியைப் பார்ப்போம். ஆமென்!!

தொடரும் ... ✝

---

**அன்னாளிடம் காணப்படும் 6 நல்ல குணங்கள்.**

1. **தீமையோடு எதிர்த்து நிற்காத அன்னாள். 1 சாமு 1:62.**
2. **தேவ சமூகத்தை நேசித்த அன்னாள். 1 சாமு 1:103.**
3. **அடியாள் என்று சொன்ன அன்னாள். 1 சாமு 1:114.**
4. **நீண்ட நேரம் ஜெபம் செய்த அன்னாள். 1 சாமு 1:125.**
5. **இருதயத்தை ஊற்றி ஜெபித்த அன்னாள். 1சாமு 1:156.**
6. **பெருந்தனையில் உண்மையுள்ள அன்னாள். 1 சாமு 1:28**

## வாலிபர் பகுதி

# கிருபை, விசுவாசம், கிரியை!

Dr. **ஏபில் நாயகம்**

**பி**ரியமானவர்களே! தேவன் இந்த மனுக்குலத்தை மீட்க சித்தம் கொண்டு, அவனுக்கு இரட்சிப்பு என்ற ஈவை இலவசமாகக் கொடுத்தார். ஆனால், இந்த இரட்சிப்பை நாம் எந்த வகையில் பெற்றுக் கொள்கிறோம் என்ற கேள்விக்குத் தெளிவான பதில் பலரிடம் இல்லை. சிலர் **விசுவாசம் மட்டும் போதும்** என்கிறார்கள். சிலர் இது தேவனுடைய கிருபையாக இருப்பதினால் நாம் அதை பெற்றுக்கொள்ள ஒன்றும் செய்யத் தேவையில்லை, அது தானாகவே நமக்குக் கிடைத்துவிடும் என்கிறார்கள். சிலர் ஞானஸ்நானம் தேவை என்கிறார்கள். சிலர் ஞானஸ்நானம் மனிதனுடைய கிரியையாய் இருக்கிறது. அதினால் அது இரட்சிப்புக்கு வழிவகுக்காது என்கிறார்கள். இவற்றுள் எது உண்மை? கிருபை, விசுவாசம், கிரியை இம்மூன்றில் எது இரட்சிப்பை பெற அவசியம்? இதுதான் இம்மாதத்திற்கான நம் பாடம்.

**ரோமர் 4:3 ல்,** .... ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. எனவே, விசுவாசம் மட்டும் போதும் என்பவர்கள் இந்த வசனத்தை பயன்படுத்தப்படுத்துகிறார்கள்.

I **பேது 3:21** ஞானஸ்நானம் இரட்சிக்கிறது என்று இருப்பதால் ஞானஸ்நானம் வேண்டும் என்று கூறுபவர்கள் இவ்வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்கள்.

**யோவான் 3:16,** விசுவாசிக்கிறவன், நித்திய ஜீவனை அடைவான் என்ற இருப்பதால், விசுவாசம் மட்டும் போதும் என்கிறவர்களும் உண்டு

**எபேசியர் 2:8,** கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று வசனம் கூறுகிறது. எனவே தேவனுடைய கிருபையும், விசுவாசமும் போதும், ஞானஸ்நானம் தேவையில்லை என்று சிலர் நம்புகிறார்கள்.

அப்படியானால், ஒருவர் இரட்சிக்கப்பட எது தேவை? கிருபையா? விசுவாசமா? – கிரியைகளா? வாருங்கள் தியானிக்கலாம்.

I முதலாவது இம்முன்று வார்த்தைகளுக்கான அர்த்தங்களைப் பார்ப்போம்.

A. **விசுவாசம்** –நம் வேதாகமத்தில் இந்த வார்த்தை மூன்று வித்தியா சமான பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(i) எபிரெயர் 11:6 → **நம்புதல்** என்ற **பொருளில்** இந்த வசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ii) எபேசியர் 4:5 → நம்பிக்கையின் அடிப்படை, கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை என்ற பொருளில் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது **ஒரே விசுவாசம்**

(iii) ரோமர் 14:21–23 → **தனிப்பட்ட நம்பிக்கை** என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

B. **கிரியை** – இந்த வார்த்தையும் மூன்று பொருளில் நம் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

(i) ரோமர் 4:1–4 → இந்த இடத்தில் ஆபிரகாம் கிரியை களினாலே நீதிமானாக்கப்பட்டானென்று சொல்லப் படாமல், விசுவசத்தினாலே நீதி மானாக்கப் படானென்று பார்க்கிறோம். இங்கே கிரியை என்பது மோசேயினுடைய நியாயப் பிரமாண த்தின் கிரியைகளினால், அதாவது , விருத்த சேதத்தினால் ஆபிரகாம் நீதி மானாக்கப் படவில்லை என்று பொருள்படுகிறது.

(ii) யாக் 2:21 ல் → யாக் 2:21 ல், கிரியையினாலே அல்லலோ நீதி மானாக்கப்பட்டான் என்ற வாசிக்கிறோம். இது ரோமர் 4ல் நாம் வாசித்த வசனத்திற்கு எதிரான பொருளைத் தருகிறது. ஏனென்றால், இந்த வசனத்தில் **கிரியை என்பது விசுவாசத் தினால் உண்டாகும் கிரியையைக்** குறிக்கிற தாயிருக்கிறது.

(iii) எபே 2:8 ல் → **இது கிரியைகளினால் உண்டானதால்ல** என்று வாசிக்கிறோம். இங்கே கிரியை என்பது **தனிமனித தகுதியை** குறிக்கிறது. எனவே தான், ஒருவரும் பெருமைபாட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டான தல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் இரட்சிப்பை பெற தகுதியுள்ளவன் என்று ஒருவராலும் சொல்ல முடியாது.

C. **கிருபை (Grace)** – தகுதியற்ற நிலையில் தயவு – எபே 2:8 ல், தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லப்பட்ட வசனத்தில் தகுதியற்ற நிலையில் தயவு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

லூக்கா 2:40 ல் → தேவனுடைய கிருபை [பிள்ளையாகிய இயேசுவின் மேல்] இருந்தது என்று வாசிக்கின்றோம். இந்த வசனத்திலே **தகுதியற்ற தயவு** என்ற பொருளை நாம் பயன்படுத்த முடியாது. மாறாக, தேவன் இயேசுவோடு இருந்தார் என்பதற்கு **கிருபை** என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

கொலோ 4:6 ல் → நம் வசனம் எப்பொழுதும் **கிருபை** பொருந்தினதாய் இருக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் நாம் பேசும் சொற்கள் அன்பானதாகவும், கருணையுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதத்தில் கிருபை என்ற வார்த்தையும் அதன் பொருள்களும் 160 முறைக்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கிருபை = தயவு என்று சொல்லப்படும் போது, வெறும் தயவாக மட்டும் இல்லாமல், கிரியை செய்கிற தயவாக, செயல் படுகிற ஒன்றாக இருக்கிறது.

தேவனுடைய கிருபை, இயேசுவைக் இப்பூமிக்க அனுப்பியது தேவ கிருபை, தயவு செய்கிற செயல்பட்டு ஒன்றாக இருக்கிறது.

எனவே, இந்த மூன்று வார்த்தைகளும் என்னென்ன பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஒருவர் முதலாவது புரிந்து கொள்ள வேண்டும்.

II **கிருபை, விசுவாசம், கிரியை** இம்மூன்றும் நம் இரட்சிப்புக்கு அவசியம் ; இரட்சிப்பில் மூன்றும் ஒன்றாக வேலை செய்கிறது.

எபே 2–8–ல் **கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு** என்று வாசிக்கிறோம்.

இந்த வசனத்தை நாம் வாசிக்கும் பொழுது இரட்சிப்புக்கு இரண்டு காரியங்கள் தேவை என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒன்று தேவனிடம் இருந்து கிடைப்பது. மற்றொன்று மனிதனின் பங்கு.

| 1. தேவன் | 2. மனிதன் |
|---|---|
| ↓ | ↓ |
| கிருபை | விசுவாசம் |
| [செயல்பட்ட கிருபை] | [நம் விசுவாசமும் செயல்படுகிறதாக இருக்க வேண்டும்] |
| – குமாரன் அனுப்பப்பட்டார் | ஞானஸ்நானமாகிய |
| – குமாரன் மரித்தார் | கிரியையோடு அந்த விசுவாசம் வெளிப்பட வேண்டும். |

8:12 ல், விசுவாசித்த போது ... ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வாசிக்கிறோம். விசுவாசம் மட்டும் இரட்சிப்புக்கு போதாது . விசுவாசத்தினால் உண்டாகும் ஞானஸ்நானம் என்ற கிரியை வேண்டும். இதுதான் செயல்படுகிற விசுவாசம். எனவே, விசுவாசம் மட்டும் போதாது. அது முழுமையடைய அது செயல்பட வேண்டும்.

செயல்படாத விசுவாசத்திற்கு ஓர் உதாரணமாக யோவான் 12:42 ஐ நாம் மேற்கோள்காட்ட முடியும். அநேக அதிகாரிகள் இயேசுவின் மீது விசுவாசம் வைத்தும் அதை அறிக்கை செய்யாமல் இருந்தார்கள் இங்கே விசுவாசம், வெறும் நம்பிக்கையாக மட்டும் இருக்கிறது. அது செயல்படவில்லை. இப்படிப்பட்ட விசுவாசம் செத்ததாயிருக்கிறது.

எனவே, எப்படி தேவனுடைய கிருபை செயல்பட்ட கிருபையாய் இருந்ததோ, அதைப் போலவே நம் விசுவாசமும் செயல்படுகிறதாய் ஞானஸ்நானத்தில் முடிகிற விசுவாசமாய் இருக்க வேண்டும். செயல்படாத விசுவாசம் நம்மை இரட்சிக்காது.

சிலர் எபே 2:8 ல் சொல்லப்பட்டிருக்கும் கிரியையை தவறாகப் புரிந்து கொண்டு, ஞானஸ்நானம் மனிதனுடைய கிரியை அல்லது முயற்சி. எனவே, அது இட்சிப்புக்கு தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த போதனை தவறானது. ஏனென்றால், இவ்வசனத்தில் கிரியை என்பது தனிமனித **தகுதியைப் பற்றி** பேசுகிறது. ஞானஸ்நானத்தைக் குறித்து அல்ல. எந்த மனிதனும் தான் இரட்சிப்பை பெற தகதியுள்ளவன் என்று சொல்ல முடியாது என்பதையோ இது குறிக்கிறது. நாம் விசுவாசிக்கிற, நாம் மனந்திரும்புகிற, நாம் அறிக்கையிடுகிற காரியங்களைக் கிரியைகளாக இவ்வசனம் பேசுவதில்லை.

III **நான்** ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது, அந்தக் காரியம் தேவனால் உண்டானது என்று அர்த்தமாகுமா? என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். அவர்களின் வாதம், தேவனுடைய கிருபை எனக்கு உண்டு. அதை அடைய நான் ஒன்றும் செய்ய வேண்டியது இல்லை. கிருபை மட்டும் என் இரட்சிப்புக்குப் போதுமானது என்று. இது தவறு.

தீத்து 2:11- ல் **எல்லா மனுஷருக்கும் தேவ கிருபை பிரசன்னமாகி** என்று வாசிக்கிறோம். ஒரு வேளை இரட்சிக்கப்பட கிருபை மட்டும் போதுமெனில், அனை வரும் பரலோகம் செல்வார்கள் என்றுதானே இங்கு பொருள்படும். ஏனென்றால், எல்லா மனுஷருக்கும் கிருபை கிடைத்துள்ளதே! ஆனால், இது உண்மையில்லை. ஏனெனில், மத் 7:13,14 ல் இயேசு இடுக்கமான வாசல் வழியாய் செல்பவர்கள் **சிலர்** என்று கூறுகிறார். எனவே, எல்லா மனிதரும், இரட்சிக்கப்பட முடியாது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

அப்படியானால் **கிருபையின்** வேலை என்ன? இதைப் புரிந்து கொள்ள கிருபை என்ற வார்த்தை முதல் முதலில் பயன் படுத்தப்பட்ட ஆதியாகமம் 6:8 ம் வசனத்திற்கு செல்வோம். நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.

**கிருபை** நோவாவுக்கு என்ன செய்தது?

தன் குடும்பம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதைக் கிருபை காட்டியது. ஆதி 6:22 ல் தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தான் என்று வாசிக்கிறோம்.

அங்கு கிருபை மட்டும் போதவில்லை. தேவன் சொன்னவைகளை **விசுவாசித்து, நிறைவேற்றுவது** நோவாவுக்கு அவசியமாக இருந்தது.

எபே. 2:8 ல் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம் என்று வாசிக்கிறோமே! அதற்கான பொருள் என்ன என்பதை நோவா சம்பவம் சுலபமாக்குகிறது.

கிருபையினால், செயல்படுகிற விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம். எபி. 11:7 ல் இம்மூன்றையும் ஒன்றாகக் காணமுடியும்.

1. விசுவாசத்தினாலே – நோவா விசுவாசித்தான்
2. தேவ எச்சரிப்பு பெற்று – தேவனுடைய கிருபை
3. பேழையை உண்டு பண்ணினான் – நோவாவின் கிரியை

நோவா இரட்சிக்கப்பட இவைகள் ஒரு சேர வேலை செய்தது.

| 1. தேவன் | நோவா |
|---|---|
| ↓ | ↓ |
| செயல்பட்ட கிருபை | செயல்பட்ட விசுவாசம்<br>கிரியையுள்ள விசுவாசம் |
| – எச்சரிப்பு வழங்கியது | – விசுவாசித்தான் |
| – தப்பிக்க வழிகாட்டியது. | – தேவன் சொன்னபடியெல்லாம் செய்தான். |

எனவே, இரட்சிப்படைவதற்கு கிருபை மட்டும் போதாது, விசுவாசம் மட்டும் போதாது, கிரியை மட்டும் போதாது. இவைகளில் ஒன்று போதும் என்று போதிக்கப்படும் அனைத்துமே வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, நாம் இரட்சிக்கப்பட **கிருபை, விசுவாசம்** மற்றும் **கிரியை** ஆகிய இம்மூன்றும் தேவை. இதைநாம் புரிந்து கொள்ள வேண்டும். இவை மூன்றும் ஒன்றாகச் செயல்படும்போது தான் இரட்சிப்பை ஒருவரால் பெற முடியும் ✝

சிறுவர் பகுதி

# பொறாமை

Dr. பிரெய்சி

ஹலோ குழந்தைகளே! நீங்கள் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அது மாத்திரமல்ல, சிறுவர் பகுதியை தவறாமல் வாசித்து உங்கள் நண்பர்களோடு பகிர்ந்து கொள்வீர்கள் என்றும் நம்புகிறேன். 9 – 12 வகுப்பு வரை படிக்கும் நீங்கள் பல மாத இடைவெளிக்குப் பிறகு உங்கள் தோழர், தோழிகளை நேரில் பார்ப்பதால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆயினும், எப்பொழுதும் எச்சரிக்கையாக இருங்கள். ஒவ்வொரு நாளையும் ஜெபத்தோடு தொடங்குங்கள்.

இம்மாதம் ஆதியாகமம் 4–ம் அதிகாரத்தில் உள்ள காயீன் மற்றும் ஆபேல் பற்றிப் பார்க்கப் போகிறோம்.

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்து, காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரியாததால் காயீன் தன் சகோதரனைக் கொலை செய்தான் என்னும் சம்பவத்தை நாம் அறிவோம். ஆபேல், தன் மந்தையின் தலையீற்றுகளை காணிக்கையாகக் கொடுத்தான். நாம் ஆபேல் போல எப்பொழுதும் சிறந்ததை தேவனுக்கும், அவரது வேலைக்கும் கொடுக்க வேணடும். அவரது சித்தத்தை நிறைவேற்றும் போதும், அவரது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும்போதும் நமக்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஆதியாகமம் 4:7,8 –ல் காயீன் பாவம் செய்யும் தன் விருப்பத்தை அவனால் மேற்கொள்ள முடியவில்லை. தன் உடன்பிறந்த சகோதரனைக் கொலை செய்யும் கொடும் செயலிலிருந்து அவனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

அன்புப் பிள்ளைகளே, சாத்தானோ அல்லது வேறு ஒருவரோ நம்மைப் பாவம் செய்ய இழுக்க முடியாது. (யாக். 1:14,15). நம்முடைய பொல்லாத எண்ணங்களும், ஆசைகளும்தான் தேவனிடமிருந்தும் அவருடைய வார்த்தைகளிலிருந்தும் நம்மைப் பிரித்து பாவத்தின் வஞ்சனையில் சிக்கிக்கொள்ள வைக்கிறது. பொல்லாத எண்ணங்களையும், ஆசைகளையும் நாம் வெற்றிகொண்டு, சரியானதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய நம்மால் முடியும்.

தான் சரியாகச் செயல்படாததினிமித்தம் தன்னுடைய காணிக்கை நிராகரிக்கப்பட்டபோது காயீன் கோபப்பட்டார்.

தவறு நேர்ந்ததைப் புரிந்து அடுத்தமுறை சரியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைப் பெறாமல், தன் பொல்லாத விருப்பத்திற்கு இணங்கி தன் தம்பியை கொலை செய்து பாவியானான்.

அன்புச் செல்வங்களே! பொல்லாத ஆசைகளையும், சோதனைகளையும் மேற்கொள்ளும்படி தேவனுடைய வார்த்தைகளை எப்போதும் நினைவில் கொண்டு உங்கள் வாழ்க்கையை சத்தியத்தால் வழி நடத்துங்கள். அதன் மூலம், சாத்தான் விரிக்கும் வஞ்சக வலையில் நீங்கள் விழாமல் காப்பாற்றப்பட முடியும். தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றி, தீமையை மேற்கொண்டு சரியானதைச் செய்யுங்கள். தேவனுடைய பிள்ளைகளாக ஒளி வீசி பரலோக தேவனை மகிமைப்படுத்துங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மிகுந்த அன்புடன்**
**ப்ரெய்சி அக்கா.**

**இம்மாத கேள்விகள்**

1. **ஆபேல் எதை காணிக்கையாக செலுத்தினான்?**
2. **காயீன் எதை காணிக்கையாக செலுத்தினான்?**
3. **இவர்களுடைய பெற்றோர் யார்?**
4. **காயீன் என்ன தொழில் செய்தான்?**
5. **ஆபேல் என்ன தொழில் செய்தான்?**

## நாளும் நடப்பும்

- கூட்டுறவு வங்கிகளில் 5 சவரனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி
- தமிழகத்தில் 6 மற்றும் 9ம் தேதி விடுபட 9 மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும்.
- சட்ட பேரவையில் நீட் தேர்வுக்கு எதிரான சட்ட மசோதா தாக்கல்
- இந்த ஆண்டு நாடு முழுவதும் தென்மேற்கு மழை தீவிரமடைந்து அணைகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி.
- **IPL** போட்டிகள் மீண்டும் இம்மாதம் ஐக்கிய அரபு எமீரகத்தில் கோலாகலமாக தொடக்கம்.

# உருமாறிய உலகத்தின் உண்மையான மார்க்கம்

Bro. **பென்னி மார்ட்டின்**

**த**லைப்பில் காணப்படும் உருமாறிய உலகம் எனும் வாசகத்தை வாசிக்கும்போது உருமாறிய கொரோனாவைப் பற்றித் தானே தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும், இணைய தளங்களிலும் பார்த்திருக்கி றோம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதென்ன உருமாறிய உலகம் என்று எண்ணுகிறீர்களா? சீனாவைப் பூர்வீகமாகக் கொண்ட இந்த கொரோனா வைரஸ் உலகின் பல இடங்களுக்கு புலம் பெயர்ந்து இன்னும் வலம் வந்து கொண்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக உருமாறிய கொரோனா வைரஸ் உலகிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. பருவங்கள் உருமாறி அதிக வெப்பம் அல்லது அதிக மழைகளை உருவாக்கி வருகின்றன. இது போன்ற எதிரும் புதிருமான காலநிலைகளை எதிர்காலங்களில் எதிர்பார்க்கலாம் என்று எச்சரிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

அண்ட சராசரங்களை உண்டாக்கின நம் தேவன் மனிதன் வாழும்படியாக மாசற்ற தூய்மையான ஒன்றாகத்தான் இப்பூமியை உண்டாக்கினார். ஆனால், மனித இனத்தின் பாவத்தின் விளைவாக நோவாவின் நாட்களில் தேவன் இப்பூமியில் மிகப்பெரிய ஜலப் பிரளயத்தை உண்டு பண்ணினார். அப்போது மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன, வானத்தின் மதகுகளும் திறவுண்டன, நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது (ஆதி 7:11). அந்நாட்களிலேயே இப்பூமி உருக்குலைந்தது. பூமியின் தட்பவெட்ப மண்டலங்கள் தடம் புரண்டன. இப்பூமிக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் இன்று நாம் எதிர்கொள்ளும் புயல் வெள்ளப் பெருக்குகளுக்கு வழி வகுத்தன. பூமிக்கு அடியில் உள்தட்டுகள் திசைமாறியபடியால் இன்று பூகம்பங்கள் ஏற்படுகின்றன. சுருக்கமாக சொல்லப்போனால் இன்று ஏற்படும் இயற்கை சீற்றங்களுக்கெல்லாம் ஆதியாகமம் 6,8 அதிகாரங்களில் ஏற்பட்ட விசித்திரமான சம்பவங்கள்தான் வித்திட்டன. இதற்கு ஏராளமான, தாராளமான புவியல் மற்றும் தொல்பொருள் ஆதாரங்கள் தொலைந்து போகாமல் உள்ளன.

இன்றும் கூட கொரோனா கொள்ளை நோயினால் இவ்வுலகம் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்வதாகவும், துருவங்களில் மாற்றங்கள் ஏற்படுவதாகவும், முன்பு போல் இல்லாமல் உலகம் உருமாறிக் கொண்டிருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்களும், ஆட்சியாளர்களும் ஆதங்கப்படுகின்றனர்.

I **உலகில் கிறிஸ்தவம் ஏன் அவசியப்படுகிறது ?**

இவ்வுலகம் இயற்கைக்கு இசைவாக இயங்க வேண்டு மென்றால் உலகில் சமாதானமும், சந்தோஷமும் சம்ரிதியும் நிலவ வேண்டு மென்றால் கிறிஸ்தவ அறநெறிகள் முறை தவறாமல் கடை பிடிக்க வேண்டும். இன்றைய உலகம் எவ்வளவு துன் மார்க்கமாய் இருக்கிறதென்பது நம்மெல்லாருக்கும் நன்றாக தெரியும். ஒழுக்க நெறிகள் தடம் புரண்டு தரை மட்டத்திற்கு தாழ்ந்து விட்டன. லஞ்சமும், நேர்மையின்மையும் இன்றைய நாட்களின் தன்மைகளாக மாறிவிட்டன. நடந்து கொண்டிருக்கிற காரியங்களை வைத்துப் பார்க்கும்போது இது எங்கேபோய் முடியும் என்று பயமாக உள்ளது? உலகில் இன்று அநேக மதங்கள் உண்டு. அவைகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் ஒன்றுக் கொன்று வேறுபட்ட கோட்பாடுகளைக் பிரதிநிதித்துவப்படுத்து கின்றன. ஆனால் உண்மையாகவே உலகில் மனித இனத்தின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் நிச்சயமாக கிறிஸ்தவம் மாத்திரமே அதைச்செய்ய முடியும். மனிதன் மகிழ்ச்சியாக வாழ இவ்வுலகின் மதங்களும், தத்துவ ஞானங் களும் எத்தனையோ வித்தைகளை கற்றுக் கொடுத்தாலும் அத்தனையும் வியர்த்தமென நிரூபித்திருக்கிறது கிறிஸ்தவம். இவ்வுலகில் கிறிஸ்தவம் மாத்திரமே மனிதன் வாழ்வதற்கான வழியையும் நம்பிக்கையோடு மரிப்பதற்கான வழியையும் லும் தருகிறது. இன்று உலகம் அறிந்த உண்மை என்னவென்றால் கிறிஸ்தவத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகிறவர்கள் ஒரு நாட்டின் சிறந்த குடி மக்களாக மாறுகிறார்கள். அவர்கள் நாட்டுச் சட்டங்களுக்கு கீழ்ப்படிதலில் நம்பிக்கை வைக்கிறார்கள். இதை உணர்ந்த வளர்ந்தவராகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் **எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப் படியக்கடவன்** என்று சொல்கிறார்.

II **உலகில் வாழும்போது கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை நம்மிடம் இருக்கிறதா?**

மனிதன் சுகமாக வாழும்படியாக அழகாக தேவனால் படைக்கப்பட்ட இந்த உலகம் போர், வன்முறை, ஒழுக்கக்கேடு

போன்றவைகளால் நிறைந்து அதன் அழகையும், அமைதியையும் இழந்து காணப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் இவ்வுலகத்தின் மக்கள் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இல்லாமலிருப்பதுதான். **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது** (பிலிப்பியர் 2:5). கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்து விஸ்தாரமாக விவரமாக விவரிப்பதற்கு அநேக காரியங்கள் இருந்தாலும் கூட சுருக்கமாக மத்தேயு 11:29 ல் **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு** என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று நாம் பார்க்க முடியும். கிறிஸ்துவின் சிந்தையை பெற்றுக் கொள்வது என்பது தியாகப் பூர்வமான மனதை பெற்றுக் கொள்வதாகும். பரலோகத்தின் பொக்கிஷமாகிய நம் இயேசு கிறிஸ்து பரலோகத்தின் சகல சௌகரியங்களையும் விட்டுவிட்டு இப்பாழாய்ப்போன உலகிற்கு பாடுகளை அனுபவிக்க வந்தார். மனித இனத்துக்கு இரட்சிப்பு நல்க வேண்டும் என்கிற தியாகப் பூர்வமான மனது கிறிஸ்துவுக்கு இல்லாதிருந்தால் இது சாத்தியமே இல்லை. தியாகப் பூர்வமான மனதும் விட்டுக் கொடுக்கும் மனதும் ஒன்றுதான், நம் சத்துருவாகிய சாத்தான் உலகில் ஒருவர் எப்போதுமே ஜெயித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒருபோதும் விட்டுக் கொடுக்கக் கூடாது எனும் விஷவிதையை பலருடைய மனதில் விதைத்திருக்கிறான், அதன் காரணமாகவே பலர் தியாகப் பூர்வமாக நடந்து கொள்ளாமல் கிறிஸ்தவ கடமைகளை தட்டிக் கழிக்கிறார்கள். அதேபோல் கிறிஸ்துவைப்போல் நாம் தேவனுக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருந்தால் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருப்போம். **அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும், கீழ்படிந்த வராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்** (பிலிப்பியர் 2:8). கிறிஸ்து தம்முடைய கீழ்ப்படிதலினாலே பிதாவைப் பிரியப்படுத்தினார். மகிமைப்படுத்தினார் நாமும் அப்படிச் செய்வோமா?

III. **உலகிற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் யாராயிருக்கிறோம்?**

கிறிஸ்தவர்களாகிய நாம் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி என்று வேத வாக்கியங்களில் அழைக்கப்பட்டாலும் கூட இவ்வுலகிற்கு நாம்

உண்மையாகவே அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிறோம். பரலோகத்தை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இப்பூமி நமக்கு சதம் அல்ல என்பதை உணர்ந்து உலகிலே ஜீவிக்கிற பிள்ளைகளாக நாம் காணப்பட வேண்டும். அது மாத்திரமல்ல. இப்பயணத்தின் ஊடே மாம்ச இச்சைகளோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.இப்போராட்டத்தில் நமக்குக் கிடைக்கும் வெற்றி அல்லது தோல்விதான் நாம் பரலோகம் போய்ச் சேருகிறோமோ என்பதை தீர்க்கமாக தீர்மானிக்கும். இவைகளைக் குறித்து பேதுரு அப்போஸ்தலன் தெளிவாக விளக்குகிறார். பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி புற ஜாதிகள் உங்களை அக்கிரமக்கார ரென்று விநோதமாய்ப் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் [I பேதுரு 2:11,12].

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் நாம் கவனிக்க வேண்டிய காரியம் பரலோகப் பயணிகளாகிய நாம் மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டும் என்பது தான். அப்போஸ்தலனாகிய பவுல் மாம்ச இச்சைகளில் சிலவற்றை [கலாத்தியர் 5:19–21] வசனங்களில் பட்டியலிட்டுருக்கிறார். சரி இந்த மாம்சத்துக்குரியவைகளைக் குறித்து சதா சிந்திக்காமல், ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து சிந்தித்து செயல் பட வேண்டும் [ ரோமர் 8:56]. துர் இச்சைகள் நம்மை துரத்தி தேவனை விட்டு தூரம் போக நம்மை நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது, அதுமாத்திரமல்ல, இவ்வுலகத்தில் நாம் வாழும் போது நம் நல்நடக்கையையும் நற்கிரியைகளையும் கண்டு உலகத்தார் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் [மத்தேயு 5:16 ; பேதுரு 2:12]. பிரியமானவர்களே, இருள்சூழ்ந்த உலகில் உருமாறிய உலகில் உண்மையான மார்க்கமாகிய கிறிஸ்தவத்தை உயர்த்திக் காட்டி ஒளி வீசி வழி தப்பிப்போனவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவோம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்! ✝

# பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதே

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! பொதுவாக நம் கிறிஸ்துவின் சபையார் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிப் போதிப்பதில்லை என நாமகரணக் கூட்டத்தார் சொல்வதுண்டு! ஆனால், கிறிஸ்துவின் சபை அடிப்படை உபதேசம் பரிசுத்த ஆவியானவரால்தான் கொடுக்கப்பட்டது என்பதை பிறர் புரிந்து கொள்வதில்லை. அதையே கிறிஸ்துவின் சபையார் போராடி போதித்து வருகின்றனர் என்பதே உண்மை புதிய ஏற்பாட்டு சபைக்கு அப்போஸ்தலர் உபதேசமே அடிப்படை என்பதை நாம் அறிவோம். அதில் ஒன்றுதான் எபே 4:30. அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் என்பது.

இங்கு மீட்கப்படும் நாள் என்பது கிறிஸ்துவின் வருகையில் நாம் ஒன்று சேர்வதைக் குறிக்கும். எப்போது நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம் என்ற கேள்விக்கு பவுல் எபே. 1:13 ல் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளான போது (ஞானஸ்நானத்தில்) பரிசுத்த ஆவியால் முத்திரைப் போடப்பட்டீர்கள் என்று குறிப்பிடுகிறார். எனவே பரி ஆவியான வருடன் தான் நம் கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பிக்கிறது. அப்படி இரட்சிக்கப்பட்டவர்கள் ஆரம்பத்தில் சபை கூடுதலில் உற்சாகம், வேத வாசிப்பு மற்றும் ஜெபத்தில் காண்பிக்கும் முனைப்பு எல்லாமே நாளடைவில் குறைந்து விடலாம். அது கூடாது என்பதற்காகத்தான் ஆண்டவர் முடிவு பரியந்தமும் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றார். மேலும் நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தமும் பற்றிக் கொள்ள வேண்டும் (எபி 3:14) என்றும் வாசிக்கின்றோம். ஆக இப்படிப்பட்ட நம்பிக்கை நமக்குக் குறையும் போது நாம் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம்.

உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராய் இருங்கள் (1பேது 1:15) என்ற வசனத்தில் நம் பொறுப்பு மிக்க கிறிஸ்தவ வாழ்க்கை சுட்டிக்காட்டப்படுகிறது. ஆவியான வருக்கும், கிறிஸ்தவனுக்கும் உள்ள தொடர்பை ரோமர் 8ம் தேதி

விளக்கிக் கூறுகிறது. சாவுக்கேதுவான நம் சரீரத்தை உயிர்ப்பிக்க தேவன் தம்முடைய ஆவியை நம்மில் வாசமாயிருக்கப் பண்ணு கிறார் என்று 11 ம் வசனத்தில் அறிகிறோம். இரண்டாவதாக நமது பெலவீனங்களில் உதவி செய்ய ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளார் என்று 26ம் வசனத்தில் வாசிக்கின்றோம். மூன்றாவதாக, நாம் சரியானபடி ஜெபிக்க அறியாதவர்களாய் இருக்கிறபடியால் நமக்காக பெருமூச்சுகளோடே வேண்டியும் கொள்கிறார் என அதே வசனத்தில் பார்க்கிறோம்.

சிறு பிள்ளைகளுக்கு விளையாட்டில் இருக்கும் ஆர்வம் படிப்பில் இருப்பதில்லை. அதேபோல, வாலிபப் பிள்ளைகளுக்கு உடையில் இருக்கும் ஆர்வம் உணவில் இருப்பதில்லை. அப்படிப் போல நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் நம் ஆர்வம் குறைபாடு உள்ளதாக இருக்கிறது. அதைச் சரி செய்யவே ஆவியானவர் நமக்காகப் பிதாவிடம் ஜெபித்து, நமது பெலவீனங்களில் உதவி செய்கிறார். அவரை துக்கப்படுத்தாமல் வைத்திருப்பது நமது முக்கியப் பொறுப்பாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் மெய்யான தேவனை விட்டு விக்கிரகங்களை நாடி அந்நிய துணையை நாடும் மனுஷரைப்போல தேவனை விசனப் படுத்தினார்கள் (ஏசா 7:13) அது மட்டுமல்ல, வனாந்தரத்தில் உணவு, தண்ணீர், உடை ஆரோக்கியம், பாதுகாப்பு போன்ற எல்லா பராமரிப்புகளையும் தந்த தேவனை அவர்கள் அசட்டை செய்து கலகம் பண்ணி அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள் என்று நேரிடையாக ஏசா 63:9,10 ல் வாசிக்கின்றோம். இப்போது நாமும் தேவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளை மறந்து நன்றியில்லாமல் சபைக் கூடுதலையும், சகோதர ஐக்கியத்தையும் அசட்டை செய்தோமானால் நீங்களும் நானும் கூட ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாய் இருப்போம். (சங் 78:40).

ஆதியிலே பூமியில் அக்கிரமம் பெருகின போது மனுஷனைத் தாம் உண்டாக்கியதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார் என்று வாசித்திருக்கிறோம் இல்லையா? இப்போது அக்கிரமங் களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே உயிர்ப்பித்துள்ளதால் நாம் தேவனைப் பிரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இல்லை எனில் ஆவியானவரை துக்கப்படுத்த நேரிடும் என்பதை

நினைவில் வைக்க வேண்டும். மேலும், நாம் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படும்போது அவரை விசனப்படுத்துகிறோம். மன்னா இஸ்ரவேலருக்கு வேண்டிய அளவுக் கொடுக்கப்பட்டு ஓய்வு நாளின் நிமித்தம் வாரத்தின் ஆறாம் நாள் இரண்டத்தனையாகக் கொடுக்கப்பட்டும் மன்னாவைத்தேடி ஓய்வு நாளில் ஜனங்களில் சிலர் சென்று தேவனுக்கு விசனமூட்டினார்கள் (யாத் 16:27,28) இது இப்போது நமக்கும் எச்சரிப்பாக இருப்பதை உணர வேண்டும். நாளைய தினக் கவலையைத் தவிர்த்து நாமும் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தை தேடாத போது அவரை விசனப்படுத்துகிறோம்.

கிறிஸ்துவின் உபதேசம் மற்றும் அப். உபதேசம் பரிசுத்த ஆவியானவரால் சபையாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கையில் அதை மாற்றி உபதேசிப்பவர்களுக்கு தேவதண்டனை நிச்சயம் என்பதையும் வேதம் எச்சரிக்கின்றது (தீத்து 3:10,11) (1 தீமோ 4:1) இதையே நமதாண்டவர் ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப் படுவதில்லை என்றார் (மத் 12:31,32)

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் அல்லவா? இவ்வுலகம் பொருளையும், பணத்தையும் ஆராதிக்கிறது. நாமோ நம்மைக் கைவிடாமலும், விட்டு விலகாமலும் இருக்கிற ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதிக்கிறோம். நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் உங்களுக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணுங்கள் என்ற அவருடைய வார்த்தையை நாம் நினைவு கூரும்போது மட்டுமே நம் தேவையை சந்திக்கிறவர் நம்மைக் கைவிடமாட்டார் என்ற நிச்சயம் நமக்கு உண்டாகும். அதினாலே நாம் தைரியமாக கர்த்தர் எனக்கு சகாயர்; நான் பயப்படேன் என்று சொல்லலாம் (எபி 13:5,6). இல்லையெனில், இஸ்ரவேலர் வனாந்திரத்தில் தேவனைக் கோபமூட்டி விசனப்படுத்தியதைப் போல நம் அவிசுவாச வார்த்தைகளை முறுமுறுத்து நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாய் காணப்படுவதே அப்படி இராமல் ஏற்றகாலத்தில் உயர்த்தப்படும்படி தேவனுடைய பலத்தக் கைக்குள்ளாக இருப்போம். தேவ ஆசீர்வாதம் உண்டாவதாக. ஆமென். ✝

# மகிழ்ச்சிக்குரிய குடும்பம்

**சகோ. K.M. பிலிப்**

**நா**ம் வாழும் இப்பூமியில் மகிழ்ச்சியை விரும்பாத மனிதர்கள்களே இல்லை எனலாம். அதுவும் குடும்பமாக மகிழ்ச்சிக்குரியதாய் இருப்பது என்பது இயலாத ஒன்று என்று மனிதர்கள் ஏக்கத்தோடு இருப்பதை நாம் காண முடிகிறது. ஆனால், உண்மை நிலையை தேவ ஆலோசனை மூலம் உணர்ந்து கொள்வோமேயானால் நிச்சயம் நம் முழு குடும்பங்களும் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும் என்பதில் சந்தேகமேயில்லை. தேவன் மனிதனுடைய நலமான வாழ்வுக்காய் உருவாக்கிய ஸ்தாபனங்கள் இரண்டு. ஒன்று சபை, இரண்டாவது குடும்பம் ஆகும். (அதி 2:22–24). தேவனுடைய படைப்பில் மனிதன் தனியாய் இருப்பது நல்லதல்ல என்று அவனுக்கேற்ற துணையாக ஏவாளை உருவாக்கி மனுஷனிடத்தில் கொண்டு வந்து இருவரையும் கணவன் மனைவியாக இணைத்து, இருவரும் ஒரே மாம்சமாய் இசைந்திருங்கள் என்று வாழ்த்தினார் (ஆதி 2:24). இப்படி உருவாக்கப்பட்ட முதல் குடும்பத்தில் நாம் கவனிக்க வேண்டியது, தேவன் தான் உருவாக்கிய (ஏவாளை ) மனுஷியை மனுஷனிடத்தில் கொண்டு வந்து ஆதாமுக்கு ஏற்ற துணையாய் இருக்கும்படி அவனோடு இணைத்து வைத்தார். பிரியமான கணவன்மார்களே! உங்கள் மனைவிமார்களை உங்களுக்கு ஏற்ற துணையாயிருக்கும் படி தேவனே அழைத்து வந்து உங்களோடு இணைத் தார் என்பதை இன்று இப்பொழுதே நீங்கள் 100% விசுவாசிப்பீர்களேயானால் உங்கள் குடும்பமென்றும் மகிழ்ச்சிக்குரிய தாகவே இருக்கும். அன்பான மனைவிகளே! உங்களை உங்கள் கணவருக்கு ஏற்ற துணையாயிருக்க கணவனோடு இணைத்தவர் என் தேவனே என்பதை இன்று உளமாற ஏற்றுக் கொள்வீர்களேயானால் உங்கள் குடும்பத்தை தேவன் மகிழ்ச்சிக்குரியதாய் மாற்றுவார்

ஒரு ஊழியன் சொன்னான்; பூமியில் மகிழ்ச்சியாயிருக்கும் குடும்பம் பரலோகத்திற்கருகில் இருக்கிறது என்று. நம் குடும்பம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளது. அந்த பரலோக மகிழ்ச்சியின் சாயல் பூமியில் நம் குடும்பங்களில் காணப்பட வேண்டாமா? தேவ ஆலோசனையை கேளுங்கள்.

பிரியமான வாலிப பிள்ளைகளே! படிக்கும் சிறுவர்களே! இந்த ஆலோசனை உங்களுக்கும் வளர்ந்தது காரணம், கணவன், மனைவி, பிள்ளைகளையும் கொண்டது தான் குடும்பம்.

எதிர்காலத்தில் ஒரு நல்ல வேலை வாய்ப்பை பெற LKG , UKG, யிலிருந்தே கற்று பயிற்சி பெறுகிறோம். மேலும், தேவ ஆலோசனையின் பேரில் தாவீதைப் போல ஆசைப்படுங்கள். உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சித்திருக்கிறபடியால் என் வாயை ஆ வென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன் என்று சொல்வோம் [சங் 119:131]. உலகில் மகிழ்ச்சியாயிருக்க அநேக புத்தகங்கள் உண்டு. ஆனால், அவைகள் மாறக் கூடியது, மறக்க கூடியது மறைந்து போய்விடும். ஆனால் நேற்றும், இன்றும், என்றும் மாறாத, மறையாத ஒரே புத்தகம் வேதம் மட்டுமே [ மத் 5:18].

ஒரு புதிய கார் வாங்கும் பொழுது அதை உருவாக்கிய நிர்வாகம் ஒரு புத்தகம் ஒன்றும் இலவசமாகக் கொடுப்பார்கள். அதில் அந்த வாகனத்தை எப்படியெல்லாம் பராமரிக்க வேண்டும். அதன் மூலம் வாங்கிய வாகனத்தின் முழு பயனையும் திருப்தியாய் அனுபவிக்க முடியும் என்ற ஆலோசனைகள் அடங்கியிருக்கும். நம் குடும்பத்தை உவாக்கியவர் தேவன். அதன் முழு மகிழ்ச்சியை அனுபவிக்க, தேவையான சகல ஆலோசனைகளும் அடங்கிய வேதத்தை நம் கைகளில் கொடுத்திருக்கிறார்; கர்த்தர் வீட்டை கட்டுகிறார். இந்த காரியம்; கர்த்தரால் வந்தது [ 24:50] என்று விசுவாசிக்கிற ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியை அனுபவ மாக்கிக் கொள்ள ஆதி 24 அதிகாரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்கள் முன் நிறுத்துகிறேன். உற்று கவனியுங்கள்.

விசுவாசிகளின் தந்தை ஆபிரகாம் தன் ஒரே மகன் ஈசாக்கு திருமணம் செய்ய விரும்பினான். பெண் பார்க்கும்படியாய் தானோபு ஈசாக்கோ செல்லாமல், தேவனாகிய கர்த்தர் நீ அங்கிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும் படிக்கு தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று [7] தேவ வழி நடத்தலை நம்பி அந்தப் பொறுப்பைத் தன் மூத்த ஊழியக்காரனிடத்தில் ஒப்புக் கொடுத்தான். என் இனத்தில் பெண் கொள்ள வேண்டும் [4,7] என்ற தன் தீர்க்கமான ஒரு முடிவையும் சொன்னான். அன்பான தேவ ஜனமே! இன்று திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று அலைந்து தேடி தேடி கடைசியில் புதரில் சிக்கிக் கொள்ளும் குடும்பங்களைக் பார்க்கிறோம். இன்றைய நாளில் தேவ ஜனமாகிய நாம், நம் பிள்ளைகளின் குடும்பங்களைக் கட்டுவது குறித்த முதல் ஆலேசனை, அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர் களாக; அவிசுவாசிகளுடன் பங்கேது என்று [கொ 6:14,15] பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் எச்சரிக்கையோடு கூடிய ஆலோசனையை கூறியிருக்கிறார்.

சாலமோன் பெரிய ஞானியாய், ராஜாவாயிருந்தும், அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகளோடு தன்னை இணைந்துக் கொண்டதால் அவர்கள் அவன் இருதயத்தை வழுவிப் போகப் பண்ணினர். அவன் தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்க முடியவில்லை. கர்தரின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளானான். தன் பெயருக்கேற்ற சமாதானத்தை சந்தோசத்தை இழந்து போனான். (I இரா 11:1-11). அன்பான கிறிஸ்துவின் சபையாரே! அந்நிய நுகத்தில் உங்களைப் பிணைத்துக் கொள்ளாதீர்கள்! ஆனால் ஆபிரகாமோ இந்த காரியத்தில் முழுக்க தேவனையே சார்ந்திருந்ததால் ஈசாக்கின் குடும்ப வாழ்க்கை பெயருக்கேற்ப மகிழ்ச்சி.

சரி, இப்பொழுது ஊழியக்காரனின் விசுவாசத்தைக் கவனிப்போம். இவன் பெண் ரெபாக்காளை சந்தித்த போது கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டிற்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தார் (27) என்று தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினார். காரணம், ரெபாக்காளிடம் அந்நியரை உபசரிக்கும் தேவ ஜனத்தின் பண்பைக் கண்டான். அவள், இவனுக்கும் ஒட்டகங்களுக்கும் எவ்விதத் தயக்கமின்றி கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு திருப்திப்படுத்தினாள். ரெபாக்காளின் வீட்டில் அவளுடைய சகோதரன் லாபான் நடந்த எல்லாவற்றையும் கேள்விப்பட்டு தேவன் தன் சகோதரியை தன் இனத்தோடு இணைக்கப் போகிறார் என்ற முடிவில் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று பூரித்துப் போனான். பெண் ரெபாக்காள் நடந்த பேசிய எல்லாவற்றிலும் தேவ ஒத்தாசையைக் கூர்ந்து கவனித்து நான் போகிறேன் (58) என்ற ஒரே வார்த்தையில் தேவ சித்தத்திற்குத் தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்தாள். முடிவாக மாப்பிள்ளை ஈசாக்கு வரப்போகும் தன் மனைவி குறித்து கற்பனையில் மூழ்காமல் வழக்கம் போல் தியானித்துக் கொண்டிருக்கையில் தன் குடும்பம் கட்டப்படுவதை முற்றிலும் தேவனுடைய கரத்தில் ஒப்புக் கொடுத்துவிட்டான் என்று பார்க்கிறோம். இப்படி தேவனால் கொண்டுவரப்பட்ட ரெபாக்களை தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான் ; மனப்பூர்வமாய் அவனை நேசித்தான். தன்னை நேசிக்கும் தன்னிடத்தில் அன்பு செலுத்தும் அருமை ஈசாக்கின் துக்கத்தை நீக்கும் அளவு கணவனின் உள்ளத்தில் இடம் பிடித்தாள். (63-67). இப்பஜ எல்லாவற்றிலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து கனப்படுத்தி இக்குடும்பத்தை தேவன் கனப்படுத்தினார். ஈசாக்கு அந்த தேசத்தில் விதை

பலன் அடைந்தான். வரவரவிருத்தியடைந்து மகா பெரியவனா னான். அன்பானவர்களே! இந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்குமா?

இப்பஜ தேவன் உனக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார் [132:8] என்ற அசைக்க முடியாத விசுவாசத்தை அஸ்திபாரமாக போட்டு உங்கள் குடும்பத்தை கட்டி எழுப்பினால் அது நிச்சயம் உயர்ந்து நிற்கும். தன் குடும்பத்தைக் குறித்து கணவனின் நிலை: கர்த்தரால் கட்டப்பட்ட இந்த குடும்பத்திற்கு நான் மிகச்சிறந்த தலைவனாயிருப்பேன் [எபே 5:23]. என் குடும்பத்தில் அன்பின் ஆட்சிதான்.ஆணினத்தின் ஆட்சி அல்ல. தேவனால் கொடுக்கப்பட்ட என் மனைவியிடம், நீடிய சாந்தமும், தயவும், சினமடையாமல், தீங்கு நினையாமல், சத்தியத்தில் சந்தோசப்பட செய்யும் பூரண அன்பை செலுத்துவேன். தேவன் எங்களுக்கு கொடுத்த பிள்ளைகளை நேசித்து, போதித்து, நடக்க வேண்டிய வழியில் நடந்துவேன் என்ற நல்ல உணர்வு இருக்குமானால் அந்தக்குடும்பம் மகிழ்ச்சிக்குரிய குடும்பமாகத் திகழும்.

மனைவியின் நிலை [எபே 5:24]: என் கணவன் எனக்குத் தலையாயிருக்கத் தேவனால் கொடுக்கப்பட்டவர். அவருக்கு ஏற்ற துணையாயிருந்து தேவ திட்டத்தின் முற்றிலும் கீழ்ப்படிவேன். என் பிள்ளை கர்த்தருக்குப் பயப்படும் பிள்ளைகளாக வளர்த்து, புத்தியுள்ள ஸ்திரீயாயிருந்து என் வீட்டை கர்த்தருக்குள் கட்டுவேன் என்று தீர்மானித்தால் அக்குடும்பம் ஞானத்தால் நிறைந்து மகிழ்ச்சியாய் ஜொலிக்கும். இப்படி யிருக்கும் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகள். கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு வளர்ந்து, நன்மைகளை அனுபவிக்க தங்கள் வாழ்நாள் நீடித்திருக்கத் தகப்பனையும், தாயையும் கனப்படுத்த யாவரோடும் சமாதானமாய், மகிழ்ச்சியால் வாழ்வார்கள். மேலும், குடும்பம் தழைத்து செழித்து வளர, சபை கூடுதலில் குடும்பமாகப் பங்கு பெறுங்கள்; வீட்டிலும் தவறாமல் குடும்ப ஜெபம் ஏறெடுங்கள்.

பிரியமானவர்களே! உங்கள் குடும்பம் கட்டப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆனாலும், கர்த்தர் என் வீட்டை கட்டுகிறார்; இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்று இன்று நீங்கள் விசுவாசித்தால் அதன்படி நடக்கத் தீர்மானித்தால், உங்கள் குடும்பம் மகிழ்ச்சிக் குரிய குடும்பமாக என்றென்றும் திகழும். ஆமென் ✝